# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முறையீட்டு மனு எண்: 668/2016/பே–1**

**ஆணை எண்.305/2017/நாள் –27–12–2017**

**திரு. பி. இராமசாமி,**
**த/பெ . திரு. பெரியண்ணன்,**
**பாரதி வீதி,**
**அம்மாபேட்டை.** -- முறையீட்டு மனுதாரர்

**பேரூராட்சி மன்றத் தலைவர்,**
**அம்மாபேட்டை பேரூராட்சி,**
**ஈரோடு மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்

**ஆணை**

திரு. பி. ராமசாமி, த/பெ திரு பெரியண்ணன், பாரதி வீதி, அம்மாபேட்டை, ஈரோடு என்பவரின் நாளிடப்படாத முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 7316/2015/இ.2/ நாள் 22.06.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு 11.07.2016 அன்று வரப்பெற்று முறையீட்டு மனு எண் 668/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு தொடர்பாக உரிய றிக்கைகள் பெறப்பட்டும் விசாரணை/வாக்குமூலங்களின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டு கீழகண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி மன்றத் தலைவர் திரு டி. செந்தில் குமார் என்பவர் மீது அடியிற்கண்ட புகார்களை தெரிவித்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

1. அம்மாபேட்டை பேரூராட்சியில் நடைபெறும் பணிகளுக்கு 30% கமிஷனாகப் பெற்று வருவதாகவும், இதனால் நடைபெறும் பணிகள் தரமற்ற முறையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
2. அம்மாபேட்டை பேரூராட்சியில் விற்பனை செய்யப்படும் வீட்டு மனைகள் அனைத்தும் பேரூராட்சியின் அங்கீகாரம் இல்லாமல் விற்கப்படுவதாகவும், இந்த வீட்டு மனைகளை விற்பனை செய்யும் பிளாட் உரிமையாளர்களைமிரட்டி தனது பெயரிலும், தனது மனைவியின் பெயரிலும் அங்கீகாரம் இல்லாத வீட்டு மனைகளை பெற்றுள்ளார் எனவும்,

3. அம்மாபேட்டை பேரூராட்சிக்குட்பட்ட, சுந்தராம்பாளையம் என்னும் இடத்தில் தனது மனைவி பெயரில் பு.ஏ. 2.40 எக்கர் விவசாய நிலத்தை ரூ 53.60 லட்சத்திற்கு பத்திர பதிவு எண் 940/2014ன்படி கிரைய உடன்படிக்கை செய்து கொண்டு பின்னர் தன் மீது பொது அதிகாரம் பெற்று கணபதி நகர் என்ற பெயரில் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை விற்பனை செய்து வருகிறார் எனவும்,
4. ரூ 5,000/– முதல் ரூ 10,000/– லஞ்சம் பெற்றுக் கொண்டு பேரூராட்சி பகுதியில் பேரூராட்சியின் அங்கீகாரம் இல்லாமல் குடிநீர் இணைப்புகள் முறைகேடாக வழங்கி வருவதாகவும்,
5. ரூ. 25,000/– முதல் ரூ 50,000/– வரை லஞ்சம் பெற்றுக் கொண்டு வீட்டின் வரைபடம் மற்றும் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கும் சம்பந்தமில்லாமல் உள்ள கட்டிடதாரர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார் எனவும், கட்டிட உரிமையாளர்களை மிரட்டியும் செயல் அலுவலர் மூலம் லஞ்சமாக பணம் பெற்றுள்ளார் எனவும்,
6. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளில் வீடு கட்டி மின் இணைப்பு பெறுவோர்களிடம் ரூ 10,000/– முதல் லஞ்சம் பெற்றுக் கொண்டு பேரூராட்சியின் ஒப்புதல் இல்லாமல் தானே வீட்டு உரிமையாளர்களுக்கு சான்று வழங்கியுள்ளார் எனவும்,
7. ஊமாரெட்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இடம் வாங்க ரூ 25.00 லட்சம் ஊர் பொதுமக்களிடம் நன்கொடை வசூல் செய்து, திருமதி தனலட்சுமி என்பவரிடம் பள்ளிக்கு இடத்தினை தானமாக வழங்கியுள்ளதாகவும், பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட பணம் முழுவதும் மோசடி செய்துள்ளார் எனவும்,
8. இது தவிர பேரூராட்சியின் பொது நல நிதி, நபார்டு பண்டு போன்ற நிதிகளை தனது சுயநல காரியங்களுக்கு பயன்படுத்தி அதில் பல லட்சம் லஞ்சமாக பெற்றுக் கொண்டு பேரூராட்சிக்கு இழப்பினை ஏற்படுத்தியுள்ளார் எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015, விதி 6ல் நிர்ணயித்தவாறு ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லையுடன் உரிய படிவத்தில் (படிவம் –1) பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 19.07.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரர் விதிகளின்படி உரியமுறையில் இம்முறைமன்ற நடுவத்தில் தனது மனுவினை சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் இம்முறையீட்டு மனு தொடர்பாக உரிய விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 03.12.2017ம் நாளிட்ட அறிவிப்பாண மூலம் ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனு குறித்தான, மனுதாரர் தரப்பிலான விளக்கத்தினை பெறும் பொருட்டு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறும் மனுதாரருக்கு இம்முஙமன்ற நடுவ 02.12.2016 ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது

முறையீட்டு மனுதாரர் இம்முறை மன்ற நடுவ அழைப்பாணையின்படி 19.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை. மேலும் அவரது மனு சம்பந்தமாக எந்த விளக்கத்தினையும் அனுப்பி வைக்கவும் தவறியுள்ளார்.

அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் கடித எண் 212/2017/நாள் 18.08.2017ன் மூலம் தனது தரப்பிலான விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள 8 புகார்களுக்கான விளக்கத்தினையும், மேற்படி பேரூராட்சி பகுதியில் பேரூராட்சித் தலைவரால் வாங்கப்பட்ட மனைகளுக்கான பத்திர நகல்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவரின் விளக்க கடித நகல், முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு டி. செந்தில்குமார் அம்மாபேட்டை பேரூராட்சியில் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பிரிவுகளில் மனைகள் வாங்கியது குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட ஆணை எண் 34/2017/நாள் 24.03.2017ன் நகல் மற்றும் இந்த ஆணையின் மீது மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் திரு பி. செந்தில் குமார் அவர்களால் தொடரப்பட்டுள்ள வழக்கு நீதிப்பேராணை எண் 10817/2017குறித்தும் மனுதாரருக்கு தெரிவித்து இப்பொருள் குறித்து மனுதாரரின் விளக்கம் / ஆட்சேபணை ஏதுமிருப்பின் ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்க கோரி இம்முறைமன்ற 23.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் இது குறித்து எந்த ஒரு விளக்ககமோ / ஆட்சேபணையோ இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்க கோரியிருந்தும், இதுவரை சமர்ப்பிக்கவில்லை. மேலும் தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக கோரியும் ஆஜராகாததோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் மனுதாரருக்கு அவரின் புகார்களுக்கான அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடித நகல் மற்றும் இம்முறைமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஆகிய விவரங்களை தெரிவித்து அதன் மீது தனது விளக்கம் / ஆட்சேபணைகளை தெரிவிக்க கூடுதல் வாய்ப்பளித்தும் எந்த ஒரு விளக்கத்தினையோ அல்லது ஆட்சேபணையோ இது வரை சமர்ப்பிக்கவில்லை. மனு விதிகளின்படி சமர்ப்பிக்காதது, விசாரணைக்கு ஆஜராகாதது, விளக்கம் அளிக்காதது ஆகிய காரணங்களின் அடிப்படையிலும், செயல் அலுவலரின் அறிக்கை பரிசீலித்ததின் அடிப்படையிலும் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள்27ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//-

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு பி. ராமசாமி,
த/பெ திரு பெரியண்ணன்,
பாரதி வீதி,
அம்மாபேட்டை,
ஈரோடு மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அம்மாபேட்டை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
சென்னை.